அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 250

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7
18 ..... மே, 1984.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனத் தலைவர்கள் அனைவருக்கும்,

1983-ஜூலை கலவரங்களால் உடமைகளுக்குச் சேதத்தையும்/அல்லது அசையும் சொத்துக்களின் இழப்பையும் அனுபவித்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் சம்பள முற்பணம்.

19-01-1984 ஆம் தேதிய 237 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவற்றோடு கீழ்க்காணும் நடவடிக்கைகளும் எடுக்கப்படலாம்.

(அ) 10 வருடங்களுக்குக் குறைவான சேவையை உடைய உறுதிப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தருக்கு கூடியபட்சம் ஒருவருட சம்பள முற்பணத்தை வழங்குதல்.

(ஆ) 55 வயதை நெருங்கும் ஓர் அரசாங்க உத்தியோகத்தர் பற்றிய வகையில் அவர் இளைப்பாறுவதற்கு முன்னர் கடனைத் தீர்த்துவிடுதற்கோ, இளைப்பாறுமிடத்து தனது ஓய்வூதியத்தை மாற்றி, ஓய்வூதியத்திலிருந்தோ மாற்றிய ஓய்வூதியத்திலிருந்தோ நிலுவையிலுள்ள கடன் தொகையை அறவிடுவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அல்லது திணைக்களத் தலைவருக்கு அதிகாரம் வழங்குவதற்கோ பிறழா உறுதியளிக்கும் பட்சத்தில் அவருக்குச் சம்பள முற்பணம் வழங்குதல். இந்தப் பிறழா உறுதிக் கூற்றைப் பெறுதற்குத் தாபனக் கோவையின் 14-ஆம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள படிவத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.

சம்பள முற்பணத்தை 8 வருடங்களுக்கு அதிகரிக்காத ஒரு கால எல்லைக்குள் மீளச் செலுத்தும் வகையில் அதன் தவணைக் கட்டணத்தை கணித்தற்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது.

(இ) நி.பி. 238 இலும் தாபனக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 3-ஆம் பிரிவிலும் குறித்துக்காட்டப்பட்ட 40%, 33 1/3% கழிவு எல்லைகளிலிருந்து பிணைக்காரருக்கு விலக்களித்தல்.

02. மேற்குறித்த பந்தியின் (அ) உடன்/அல்லது (ஆ)-ஆம் உபபந்திகளின் படி சம்பள முற்பணம் பெறத் தகுதியுடையதொரு அரசாங்க உத்தியோகத்தர் தனது விண்ணப்பப் படிவத்தை 2 ஜூலை 1984 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ திணைக்களத் தலைவரைச் சென்றடையுமாறு அனுப்புதல் வேண்டும்.

03. பிணை முறிக்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி 10/- ரூபாயாகும்.

ஒப்பம். டி.பி.ஜ.பி.எல். சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.